செ.வெ.எண்:32/2017 நாள்:13.09.2017

**சிவகங்கை மாவட்ட மைய நூலகத்தில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் துவங்கப்படவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

சிவகங்கை மாவட்ட மைய நூலகத்தில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் துவங்கப்படவுள்ளது. பொது நூலகத் துறையின் கீழ் தற்போது கோயம்புத்தூர், கரூர், வேலூர், திருச்சி, விருதுநகர், திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்ட மைய நூலகங்களில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதை தொடர்ந்து, இச்சேவையினை மேலும் விரிவாக்கம் செய்து பல மாணவர்கள் பயன்பெறும் வகையில் எஞ்சியுள்ள 24 மாவட்ட மைய நூலகங்களில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் தொடங்கப்படும் என பள்ளிக்கல்வி மானியக் கோரிக்கை எண்.25-ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு ஆணைப்படி, இத்திட்டத்திற்கு ரூ.72 இலட்சம் செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறையின் கீழ் இயங்கும் சிவகங்கை மாவட்ட மைய நூலகத்தில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் (UPSC,TNPSC,BANK Exam) வெகுவிரைவில் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து மாணவ, மாணவியர்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் கலந்து கொண்டு இலவசப் பயிற்சியினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாதத்தில் மூன்று வாரங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை, மாலை இருவேளைகளில் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது. இந்த அரிய வாய்ப்பினை மாணவ, மாணவிகள் பயன்படுத்தி கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியில் சேர விருப்பப்படும் மாணவ, மாணவிகள் தங்கள் பெயர்களை 20.09.2017-க்குள் சிவகங்கை மாவட்ட மைய நூலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் தொடர்புக்கு : 04575 – 240202, 245540.

அலுவலக மின்னஞ்சல் முகவரி : dclsvg@tn.nic.in

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.